# ஆக்லாந்து நகர பிராந்தியத்தில் உள்ள முன்னாள் அகதிகள் மற்றும் தற்போதைய புகலிட கோரிக்கையாளர்களுக்கான வைத்திய சேவைகளை அணுகுவதில்

## என்ன?

நீங்கள் ஒரு தகுதியுள்ள முன்னாள் அகதி அல்லது தற்போதைய புகலிட கோரிக்கையாளராக இருப்பின், நீங்களும் உங்கள் உடனடி குடும்பத்தினரும் ஒரு குடும்ப மருத்துவர் / ஜி.பி. (பொது மருத்துவர்) மற்றும் / அல்லது பயிற்சி செவிலியரை, பின்வரும் பட்டியலில் பங்கேற்கும் பொது மருத்துவ நிலையங்களில் ஒன்றில் (http://www.yourlocaldoctor.co.nz/former-refugee-and-asylum-seeker-health-services/ ) இலவச ஆலோசனைக்காக, அல்லது சிறிய இணை கட்டணமுடன் கூடிய நீட்டிக்கப்பட்ட ஆலோசனைக்காக சந்திக்கலாம்.

## யார்?

பட்டியலில் பங்கேற்கும் பொது மருத்துவ நிலையங்களில் ஒன்றில் நீங்கள் பதிவுசெய்யப்பட்டு மற்றும் மீள்குடியேற்றப்பட்டு அல்லது பின்வருவனவற்றில் ஒன்றின் மூலம் தற்போது நியூசிலாந்தில் இருந்தால், இந்த சேவையை நீங்கள் அணுகலாம்:

- அகதிகள் ஒதுக்கீட்டுத் திட்டம்
- குடும்ப மீளிணைப்பு அகதிகள் (அகதிகள் ஒதுக்கீட்டு குடும்ப மீளிணைப்பு பிரிவு மற்றும் அகதிகள் குடும்ப ஆதரவு பிரிவு)
- வழமையான அகதிகள் அல்லது பாதுகாக்கப்பட்ட நபர்
- புகலிடம் கோருபவர்.

நீங்கள் நியூசிலாந்தில் நுழைந்த தேதியிலிருந்து 10 ஆண்டுகள் வரை சேவைகளை அணுக முடியும்.

அகதி அந்தஸ்து கிளை மற்றும் நியூசிலாந்து குடிவரவு போன்றவற்றில் முடிவெடுக்கப்படாத அகதி அந்தஸ்து, மற்றும் பாதுகாப்பு கோரிக்கை அல்லது நீதி அமைச்சின் குடிவரவு மற்றும் பாதுகாப்பு தீர்ப்பாயத்தில் முறையீடு போன்றவற்றைக்கொண்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்த சேவையை அணுகுவதற்கு தகுதியானவர்கள்.

## தகுதிக்கான சான்று

பின்வருவனவற்றை நீங்கள் வரவேற்பாளரிடம் காண்பிக்கவேண்டும்:

- உங்கள் அகதி அந்தஸ்தை உறுதிப்படுத்தும் அல்லது உங்கள் கோரிக்கையை அல்லது மேல்முறையீட்டை உறுதிசெய்யும் வகையில் நியூசிலாந்து குடிவரவு திணைக்களத்திலிருந்து உங்களுக்கு சமீபத்தில் தேதியிட்டு அனுப்பப்பட்ட கடிதத்தின் ஒரு நகல்
- உங்கள் கடவுச்சீட்டு (அல்லது அடையாள சான்றிதழ்).

## ஏன்?

ஒரு குடும்ப மருத்துவரை (ஜி.பி.) அல்லது பயிற்சி தாதியை நீங்களும் உங்கள் உடனடி குடும்பத்தினரும் பார்வையிட இந்த சேவை உதவுகிறது. நீங்கள் பின்வரும் மூன்று சேவைகளை அணுகலாம்:

- 90 நிமிட ஆலோசனை - வருடத்திற்கு ஒரு நோயாளிக்கு ஒரு சந்திப்பு (Te Whatu Ora – Health New Zealand, Auckland, Waitematā and Counties Manukau District நிதியுதவி அளிக்கும் 75 நிமிடங்கள், மீதமுள்ள 15 நிமிடங்களுக்கு இணை கட்டணம் செலுத்தலாம் அல்லது இல்லை).

- நீடிக்கப்பட்ட ஆலோசனைகள் - 30 நிமிடங்கள் Te Whatu Ora – Health New Zealand, Auckland, Waitematā and Counties Manukau District ஆல் நிதியளிக்கப்பட்ட (15 நிமிடங்கள், மீதமுள்ள 15 நிமிடங்களுக்கு இணை கட்டணம் செலுத்தலாம் அல்லது இல்லை).
- நெகிழ்வான ஆலோசனைகள் - Te Whatu Ora – Health New Zealand, Auckland, Waitematā and Counties Manukau District ஆல் நிதியளிக்கப்பட்ட அவ்வப்போதான பராமரிப்பு (இணை கட்டணம் இல்லை). இதில் பின்வருவன உள்ளடக்கப்படலாம்: தடுப்பூசிகள் / திரையிடல் / மதிப்பீடுகள் / நோயறிதல்கள் / சிகிச்சை / புனர்வாழ்வு / அடுத்தடுத்த பரிந்துரை / குடும்ப ஆதரவு போன்றவை.

## ஒரு பொது மருத்துவ நிலையத்தை நான் எங்கு காணலாம்?

ஆக்லாந்து நகர பிராந்தியத்தில், உங்களுக்கு அருகாமையில் உள்ள, பட்டியலில் பங்கேற்கும் பொது மருத்துவ நிலையங்களில் (ஜி.பி) ஒன்றை கண்டறிய பின்வரும் இணைப்பை **அழுத்துங்கள்**: http://www.yourlocaldoctor.co.nz/former-refugee-and-asylum-seeker-health-services/ இந்த பட்டியல் வழக்கமாக புதுப்பிக்கப்படுகிறது.

## மொழி ஆதரவு

உங்களுக்கு மொழி ஆதரவு தேவைப்பட்டால், உங்கள் குடும்ப மருத்துவர் / ஜி.பி. மற்றும் / அல்லது செவிலியரைப் பார்வையிடும்போது நீங்கள் பயிற்சி பெற்ற மொழிபெயர்ப்பாளர்களுக்கு இலவச அணுகலைப் பெறலாம். தயவுசெய்து உங்கள் குடும்ப மருத்துவர், செவிலியர் அல்லது வரவேற்பாளரிடம் கேளுங்கள். அவர்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்ய உங்களுக்கு உதவுவார்கள்.

## மேலதிக மூலவளங்கள்

ஒரு குடும்ப மருத்துவர் (ஜி.பி.), நியூசிலாந்து உடல்நலம் மற்றும் ஊனமுற்றோர் அமைப்பு மற்றும் சுகாதார சேவைகளுடன் இணைவது குறித்த தகவல்களுக்கு, பின்வருவனவற்றை பார்வையிடுக:

http://www.yourlocaldoctor.co.nz

http://www.yourlocaldoctor.co.nz/useful/the-nz-health-system